3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு பிரச்சினையும் ஒவ்வொரு நாள் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு) திரு. பொன்முடி (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், இதையெல்லாம் அறையிலே வந்து பேச வேண்டும். பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு) டாக்டர் பொன்முடி. (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையெல்லாம் அறையில் வந்து பேச வேண்டும். திரு. பழனிசாமி, அறையில் வந்து பேசவேண்டும். பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. நேற்று ஒன்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்று ஒன்று எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதற்கு மேலே பேசுவதற்கு அனுமதி அளிக்க முடியாது. டாக்டர் பொன்முடி, பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன் பேசுவதை அனுமதிக்க முடியாது. பொன்முடி, பேசுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: நீங்கள் அனுமதி அளிக்காததால் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடு) பழனிசாமி, நீங்கள் மூத்த தலைவர் (குறுக்கீடு) ஒவ்வொரு நாளும் பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி எடுத்துக்கொள்ளப்படுகிறது. இன்றைக்கே 2, 3 சிறப்புக் கவன ஈர்ப்புகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. (குறுக்கீடு) நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. (குறுக்கீடு) இப்போது அனுமதி அளிக்க முடியாது. டாக்டர் பொன்முடி.

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இது முறைகேடானது. நீங்கள் பேசுவது முறைகேடானது. விதிமுறையை மீறியது. சட்டமன்றத்தினுடைய மரபுக்கு விரோதமானது. ஒரு கட்சியினுடைய தலைவரே இப்படிப் பேசுவதற்காக நான் வருந்துகிறேன். இதை அனுமதிக்க முடியாது. பொன்முடி பேசுங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. பழனிசாமி, அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடு) அனுமதிக்கவில்லை, அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் பேசியதை அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை எதுவுமே அவைக் குறிப்பில் ஏறாது. என்னுடைய அனுமதி இல்லாமல் பேசியது எதுவுமே அவைக் குறிப்பில் ஏறாது. திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் பேசுவது அனைத்தும் அவைக் குறிப்பில் ஏறாது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) பழனிசாமி, கொஞ்சம் அவையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) நீங்கள் செய்வது முறைகேடானது. அனுமதி கொடுக்க முடியாது. தயவுசெய்து அமருங்கள். திரு. பொன்முடி (குறுக்கீடுகள்) பேராசிரியர் அவர்கள்.

முற்பகல் 11-05

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இப்பொழுது எழுப்பிய அந்தப் பிரச்சினை குறித்து இன்றைக்கு எடுத்துக்கொள்ளாவிட்டாலும், நாளையதினம் எடுத்துக்கொள்வதாக உறுதி கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

2003 நவம்பர் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, அதாவது பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்று எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இன்றைக்கே மூன்று சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் வருகின்றன. அவர்கள் வலியுறுத்தக்கூடிய பிரச்சினைக்கு முக்கியத்துவம் இருக்குமானால் அதுபற்றி அரசு பரிசீலித்து எப்போது எடுத்துக்கொள்ள முடியுமோ அப்போது எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அவர்கள் நினைக்கின்ற அன்றைக்கு உடனேயே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வது, முறையற்றது. இன்றைக்கும் முக்கியமான பிரச்சினைகள்தான் வருகின்றன. (குறுக்கீடு) இன்றைக்கும் முக்கியமான பிரச்சினைகள்தான் வருகின்றன.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு மாதம் கழித்து சட்டமன்றம் கூடுகிறது. இந்த ஆறு மாத காலத்தில் பல்வேறு நிகழ்வுகள் நிகழ்ந்து இருக்கின்றன. அதுகுறித்து நிறைய நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் நாங்கள் கொடுத்திருக்கின்றோம். அவை முக்கியமான பிரச்சினைகள். ஒரு நாளைக்கு ஒரு பிரச்சினை மட்டும்தான் எடுத்துக்கொள்வது, சட்டசபை ஐந்தே நாள் நடக்கும் என்று சொன்னால், அனைத்துப் பிரச்சினைகளையும் இங்கே விவாதிக்க முடியாது. எனவே, நீங்கள் இன்று இல்லாவிட்டாலும், நாளை எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்வது சிறப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கிற எல்லா ஒத்திவைப்புத் தீர்மானங்கள், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமானால் 234 நாட்கள் கூட்ட வேண்டும் சட்டசபை. பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதித்தான் அவையில் எடுத்துக்கொள்ள முடியும். திரு. பொன்முடி பேசுங்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: இது முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது எடுத்துக்கொண்டு இருப்பது முக்கியமான பிரச்சினை இல்லையா?

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: இது முக்கியமான பிரச்சினை இல்லையென்று சொல்லவில்லை.

[2003 நவம்பர் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி எப்பொழுது வாய்ப்பு இருக்கிறதோ அப்பொழுது எடுத்துக்கொள்ளலாம். அதுபற்றி ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) அதை எப்படி குறிப்பிட்டுச் சொல்வது? உட்காருங்கள். அறையிலே வந்து பேசுங்கள் அவற்றையெல்லாம். (குறுக்கீடு) இதற்காகத்தான் அறையிலே வந்து பேசச் சொல்கிறேன். அறையிலே வந்து விவாதிக்கலாம் அதை. திரு. பொன்முடி பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இப்பொழுது பேசுவது எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது. அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. பழனிசாமி அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை (குறுக்கீடு). பழனிசாமி அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார் என்று தெரியவில்லை. வெளிநடப்புச் செய்யப்போகிறார்களா அல்லது வெளியேற்ற வேண்டுமா? என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து அமருங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பழனிசாமி, முறைகேடாக இப்படி பேசிக்கொண்டிருப்பது சரியல்ல. தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து அமருங்கள் (குறுக்கீடு). தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு விளக்கம் சொல்லியிருக்கிறேன். பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி, ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இன்றைக்கே மூன்று பிரச்சினைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மூன்றுமே முக்கியமான பிரச்சினைகள். ஆகவே, இதிலே அரசு பதில் சொல்வதற்கு ஒன்றும் தயங்கவும் இல்லை; இதில் எடுத்துக்கொள்வதிலே ஒன்றும் பிரச்சினையும் இல்லை. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அதை எதிர்க்கட்சிகளுக்குச் சொல்லுங்கள். தி.மு.க.விற்கு எல்லாம் பாடம் நடத்துங்கள். எது முக்கியமான பிரச்சினை என்று சொல்லுங்கள். காங்கிரஸ் கட்சிக்குச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லாவற்றுக்கும் பாடம் நடத்துங்கள். முக்கியமான பிரச்சினை என்றால் அரசு கருதக்கூடிய முக்கியமான பிரச்சினைதான் எடுக்கிறோம். தயவுசெய்து உட்காருங்கள், திரு. பொன்முடி பேசுங்கள். (குறுக்கீடுகள்)

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)